

திருச்சி மாநகராட்சி மண்டலம் மூன்று திருவெறும்பூர் தொகுதிக்கு உட்பட்ட மாநகர பகுதிகளில் பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து கட்டப்பட்ட குடிநீர்த் தொட்டியை மக்களின் பயன்பாட்டிற்கு துவக்கி வைத்தார். இந்நிகழ்வுகளில் மண்டலம் மூன்றின் தலைவர் மாநகரக் கழகச் செயலாளர் மு.மதிவாணன், பகுதி கழகச் செயலாளர்கள் நீலமேகம், தர்மராஜ், விஜயகுமார், சிவக்குமார், மாமன்ற உறுப்பினர்கள் ரமேஷ் பியூலாமாணிக்கம், கோவிந்தராஜ் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி, தாலீப் திருமண மஹாலில், பள்ளிக்கல்வித்துறையின் சார்பில், அரசு/நகராட்சி/ஊராட்சி ஒன்றிய தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கு, கையடக்கக் கணினிகளை, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் வழங்கினார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் (பொ) திருமதி.ஆர்.ரம்யாதேவி, அறந்தாங்கி வருவாய் கோட்டாட்சியர் ச.சிவக்குமார், முதன்மைக் கல்வி அலுவலர் (பொ) கூ.சண்முகம், அறந்தாங்கி நகர்மன்றத் தலைவர் ஆனந்த், அறந்தாங்கி ஒன்றியக்குழுத் தலைவர் திருமதி.மகேஸ்வரி சண்முகநாதன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

### கள்ளச்சாராயம் விற்றால் ஆயுள் வரை சிறை

# சட்டத் திருத்தம் நடைமுறைக்கு வருகிறது!

## ஆளுநர் ஒப்புதல்!

சென்னை, ஜூலை 14 -

தமிழ்நாடு அரசு சட்டப்பேரவையில் நிறைவேற்றிய மதுவிலக்கு சட்டத் திருத்த மசோதாவுக்கு ஆளுநர் ஆர்.என். ரவி ஒப்புதல் அளித்துள்ளார். இதன் மூலம் கள்ளச்சாராயம் தொடர்புடைய வழக்குகளில் ஆயுள் வரை சிறைத் தண்டனை மற்றும் ரூ. 10 லட்சம் வரை அபராதம் விதிக்கும் தமிழக அரசின் சட்டம் விரைவில் நடைமுறைக்கு வருகிறது.

கள்ளக்குறிச்சி கருணாபுரம், மாதவச்சேரி, சேஷசமுத்திரம் பகுதிகளில் ஜூன் 19 அன்று விஷச் சாராயம் குடித்த 229 பேர் உடல் நலம் பாதிக்கப்பட்டனர். 66 பேர் வரை பலியாகினர். தமிழகத்தில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்திய இந்த துயரத்தைத் தொடர்ந்து, கள்ளச் சாராயத்தை முற்றிலுமாக ஒழிக்கும் நோக்கில், அதற்கான தண்டனைகளை கடுமையாக்க வகைசெய்யும் மதுவிலக்கு சட்டத் திருத்த மசோதாவை, தமிழ்நாடு அரசு கடந்த ஜூன் 29 அன்று சட்டப்பேரவையில் நிறைவேற்றியது.

இதில், கள்ளச்சாராயத்தை முற்றிலுமாக ஒழிக்கும் வகையில், அதை தயாரிப்பவர்கள் விற்பனை செய்பவர்களுக்கு ஆயுள் வரை கடுங்காவல் தண்டனையோடு, 10 லட்சம் ரூபாய் வரை அபராதத் தொகையை உயர்த்தி கடுமையான தண்டனைகளை விதிப்பதற்கான சட்டத்திருத்தத்தை மேற்கொண்டது.

இந்த சட்ட முன்வடிவை அறிமுகம் செய்து பேசிய அமைச்சர் எஸ். முத்துச்சாமி, "தற்போதுள்ள 1937ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு சட்டத்தின் படி விதிகளை மீறி மதுவினை இறக்குமதி செய்வது, ஏற்றுமதி செய்வது, அருந்துதல், மனித உயிருக்கு கேடு விளைவிக்கக்கூடிய கள்ளச் சாராயத்தை தயாரித்தல், உடைமையில் வைத்திருத்தல், விற்பனை செய்வது போன்று வழக்கமாக நடைபெறும் குற்றங்களுக்கு வழங்கப்படக் கூடிய தண்டனைகள் போதுமானதாக இல்லை என்று கருதி இச் சட்டத்திருத்தம் கொண்டு வரப்பட்டுள்ளது" என்று தெரிவித்தார். மேலும், "தற்போதைய சட்டத் திருத்தத்தில் சிறைத் தண்டனையின் கால அளவும், அபராதத் தொகையினுடைய அளவும் கணிசமாக அதிகரிக்கப்பட்டுள்ளது. மதிமயக்கக்கூடிய மருந்தினை தயாரிப்பது, கொண்டு செல்வது, வைத்திருப்பது மற்றும் நுகர்வுக்கு தடை விதிக்கப்பட்டிருக்கிறது.

இவ்வாறு அந்த மதுவினை அருந்துவதால் மரணம் ஏற்பட்டால் ஆயுள் காலம் வரை கடுங்காவல் சிறைத் தண்டனையோடு பத்து லட்ச ரூபாய் வரைக்கும் அபராதத் தண்டனை விதிக்கப்படும். இதேபோல குற்றங்களில் பயன்படுத்தக் கூடிய அசையும் சொத்துக்களையும் பறிமுதல் செய்வதோடு மது அருந்துவதற்கு பயன்படுத்தப்படும் உரிமை இல்லாத இடங்களை மூடி முத்திரையிடவும், இந்த குற்றங்களை செய்யக்கூடிய நபர் எதிர்காலத்தில் இது போன்ற குற்றங் களை செய்வதிலிருந்து தடுப்பதற்கு கணிசமான தொகைக்கு பிணை முறிவினை நிறைவேற்றுவதற்கும் நிர்வாகத்துறை நடுவருக்கு அதிகாரம் அளிக்க வழிவகை செய்யப்பட்டு இருக்கிறது" என்றும் விளக்கினார். இந்த திருத்த மசோதா, உறுப்பினர் களின் விவாதத்திற்கு பின் சட்டசபையில் நிறைவேற்றப்பட்டது.

இந்தச் சட்டம், 2024 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (திருத்தம்) சட்டம் என அழைக்கப்படும் என்று அறிவிக்கப் பட்டு, உடனடியாக ஆளுநரின் ஒப்புதலுக்காக அனுப்பி வைக்கப்பட்டது. இந்நிலையில், கள்ளச் சாராயத்தை முற்றிலும் ஒழிக்கும் வகையில் கடுமையான தண்டனைகளை விதிக்கும் மதுவிலக்குத் திருத்தச் சட்ட மசோதாவுக்கு ஆளுநர் ஆர்.என். ரவி தற்போது ஒப்புதல் அளித்துள்ளார்.

### புதுச்சேரியில்

# குரூப் - பி பணியிடங்களுக்கு வயது தளர்வு மறுப்பு!

## புதுவை எதிர்க்கட்சித் தலைவர் இரா. சிவா கண்டனம்!



புதுச்சேரி, ஜூலை 14-

புதுச்சேரியில் குரூப், பி பணியிடங்களுக்கு வயது தளர்வு மறுப்புக்கு ஒன்றிய, மாநில அரசுகளுக்கு எதிர்க்கட்சித் தலைவர் இரா.சிவா கண்டனம் தெரிவித்துள்ளார்.

புதுச்சேரி சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் இரா.சிவா வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: -

புதுச்சேரி மாநிலத்தில் படித்த இளைஞர்களுக்கு அரசு வேலை என்பது கானல் நீரான கதையாகி விட்டது. புதுச்சேரி அரசின் பல்வேறு துறைகளில் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட அரசுப் பணியிடங்கள் காலியாக இருந்தும் அதனை நிரப்புவதற்கு ஆட்சியாளர்களுக்கு எண்ணமில்லை. பல ஆண்டுகளாக அரசுப் பணியிடங்கள் நிரப்பாததால் படித்த இளைஞர்கள் வேலைக்காக அண்டை மாநிலங்களுக்கு சொற்ப சம்பளத்திற்கு செல்லும் நிலை உள்ளது.

புதுச்சேரி அரசு துறைகளில் புதுச்சேரியைச் சேர்ந்த இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கின்ற வாய்ப்பும், உரிமையும், குரூப்-சி, குரூப் - பி ஆகிய இரு வழிகள் மட்டுமே உள்ளது. இதில் அரசின் மெத்தனத்தாலும், இயலாமையாலும் குறித்த நேரத்தில் அந்த பொறுப்புகளுக்கான ஆட்களை தேர்வு செய்யாத காரணத்தினாலும், காலி இடங்கள் பல வருடங்கள் நிரப்பப்படாமல் இருப்பதாலும் வேலைகளை எதிர்பார்த்துக்கொண்டு இருக்கின்ற இளைஞர்கள் வயது வரம்பை தளர்த்த வேண்டிய கோரிக்கையை முன்வைக்கின்ற நிலைமைக்கு தள்ளப்படுகிறார்கள். அந்த விதத்தில் தான் நடந்து முடிந்த குரூப்-சி பிரிவு இடங்களுக்கு இரண்டு ஆண்டு வயது தளர்வு கொண்டு அப்பதவிகள் நிரப்பப்பட்டுள்ளன. இதே வழியில் குரூப்-பி பதவிக்கான வயது வரம்பை தளர்த்த முடியாது என்று ஒன்றிய அரசு கைவிரித்திருப்பது இந்த அரசின் செயலின்மையையும், இளைஞர்களின் எதிர்காலம் பற்றி இந்த அரசு கொண்டுள்ள மெத்தனத்தையும் படம் பிடித்து காட்டுகிறது.

ஒன்றியத்திலும், மாநிலத்திலும் ஒரே கட்சி ஆட்சி செய்தால் இந்த டபுள் இன்ஜின் அரசுகளால் மிகப் பெரிய பயன் மாநில மக்களுக்கு உருவாகும் என்று கட்டுக்கதையை விட்டுக் கொண்டிருக்கின்ற இந்த ஆட்சியாளர்களின் முகத்தில் இன்று கரிப்பூசப்பட்டிருக்கிறது. வயது தளர்வை மறுப்பதற்கு ஒன்றிய அரசு கூறும் காரணம் என்ன?. சி குரூப்பிற்கு அளித்த வயது தளர்வை ஏன் பி குரூப்பிற்கு அளிக்க இவர்கள் ஏன் மறுக்கிறார்கள்?. ஒன்றிய அரசு இப்படிப்பட்ட எதிர்வினையான முடிவை எடுக்கும் சூழலில் எந்த அமைச்சராவது அல்லது அதிகாரியாவது டெல்லி சென்று சம்பந்தப்பட்ட துறையின் பொறுப்பாளர்களை சந்தித்து விளக்கம் அளித்துள்ளார்களா?. குரூப்-சி, குரூப்-பி ஆகிவைகளில் மாநில அரசுக்கு அதிகாரம் இருக்கின்ற பொழுது ஒன்றிய அரசின் அனுமதி கேட்டு இவர்கள் கோரிக்கை அனுப்ப வேண்டிய அவசியம் என்ன?. இதன் மூலம் மாநில அரசின் அதிகாரத்தை இந்த அரசு காவு கொடுக்க முயல்கிறதா?.

சட்டமன்ற உறுப்பினர்களின் எண்ணத்தை பிரதிபலிக்கின்ற வகையில் அமைச்சர்கள் செயல்படுவதில்லை. மாநிலத்தின் உரிமை, வேலை வாய்ப்பு போன்ற விஷயங்களில் அமைச்சர்கள் நேரிடையாக டெல்லி சென்று சம்பந்தப்பட்ட அமைச்சர்களை, அதிகாரிகளை சந்தித்து தீர்வு காண்பதில்லை. இதனால் புதுச்சேரி அதிகாரிகள் மெத்தனமாக செயல்படுகின்றனர். ஒட்டுமொத்தமாக ஆட்சியாளர்களின் நிர்வாகத் திறன் கேள்விக்குறியாகி உள்ளது. இந்த நிலையில் இந்த ஆட்சிமீது ஆட்சியில் அங்கம் வகிக்கின்ற பெரும்பான்மையான சட்டமன்ற உறுப்பினர்கள் போர்க்கொடி தூக்கி டெல்லி வரை படையெடுத்து இருக்கிறார்கள்.

சப் - இன்ஸ்பெக்டர் போன்ற குரூப்-பி பதவிகளுக்கு வயது தளர்வு தருவோம் என்று அறிவித்து புதுச்சேரி இளைஞர்களை எதிர்பார்க்கச் செய்து, இன்று இயலாது என்று கைவிரிக்கும் இந்த துரோகச் செயலை திமுக வன்மையாக கண்டிக்கிறது. ஆகவே, இளைஞர்களின் எதிர்காலத்தை சீர்குலைக்கின்ற இந்த செயலுக்கு புதுச்சேரி அரசு உடனடியாக தீர்வு கண்டு இளைஞர்களின் வாழ்வில் ஒளியேற்ற வேண்டும் என்று இந்த அரசை வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு இரா.சிவா எம்.எல்.ஏ. தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

### நீலகிரி மாவட்டம் – கீழ் கோத்தகிரியில்

# ஊரகப் பகுதிகளில் "மக்களுடன் முதல்வர்" திட்டம்!

## அமைச்சர் கா.ராமச்சந்திரன் முகாமினை துவக்கி வைத்து பார்வையிட்டார்!

நீலகிரி, ஜூலை 14-

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தருமபுரி மாவட்டம், பாளையம் புதூர் ஊராட்சி, அரசு மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் (11.07.2024) அன்று ஊரக பகுதிகளில் "மக்களுடன் முதல்வர்" திட்டத்தை தொடங்கி வைத்ததை தொடர்ந்து, நீலகிரி மாவட்டம், கீழ்கோத்த கிரி, தேவ சாஸ்த்ரா திருமண மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் முகாமினை துவக்கி வைத்து பார்வையிட்டார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. மு.அருணா முன்னிலை வகித்தார்.

பின்னர், சுற்றுலாத்துறை அமைச்சர் தெரிவித்ததாவது: தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அனைத்து தரப்பு மக்களும் பயன் பெறும் வகையில் பல்வேறு திட்டங்களை அறிவித்து, செயல்படுத்தி வருகிறார்கள். அத்திட்டங்களுக்கெல்லாம் முத்தாய்ப்பாக ஊரக பகுதிகளில் "மக்களுடன் முதல்வர்" திட்டத்தை இன்று தருமபுரி மாவட்டத்தில் துவக்கி வைத்துள்ளார்கள். "மக்களுடன் முதல்வர்" திட்டத்தின் முக்கிய நோக்கம் என்னவென்றால், அரசுத்துறைகளை அன்றாடம் அணுகும் பொதுமக்களுக்கு, அரசின் சேவைகள் விரைவாகவும், அருகிலும், எளிதாகவும் அவர்களைச் சென்று சேரும் வகையிலும், அரசின் அடிப்படை சேவைகளை ஒரே இடத்தில் கொண்டு வருவதுதான். இத்திட்டத்தின்கீழ் பொது மக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை அரசு அலுவலகங்களுக்கு செல்லாமலேயே இணைய தளத்தின் மூலம் பதிவேற்றம் செய்யப்படுகிறது.

இத்திட்டமானது, முதற்கட்டமாக 17.12.2023 அன்று கோயமுத்தூர் மாவட்டத்தில் துவக்கி வைக்கப்பட்டது. முதற்கட்டத்தில் தமிழ்நாட்டில் நகராட்சி மற்றும் பேரூராட்சிகளில் மொத்தம் 2,058 முகாம்கள் நடத்தப்பட்டு, சுமார் 8.7 இலட்சம் மக்களின் கோரிக்கைகளுக்கு தீர்வு செய்யப்பட்டுள்ளது.

நீலகிரி மாவட்டத்தில், இத்திட்டமானது 18.12.2023 அன்று துவக்கப்பட்டு, 04.01.2024 வரை மொத்தம் 29 சிறப்பு முகாம்கள் அனைத்து நகராட்சி மற்றும் பேரூராட்சிகளில் நடைபெற்றது. இதில், மக்களுடன் முதல்வர் திட்டத்தின்கீழ், வழங்கப்பட்ட 1,932 மனுக்களில் 1102 மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. அதேபோல், முதல்வரின் முகவரி திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட சுமார் 14,414 மனுக்களில் 6,396 மனுக்கள் இதில் 640 பயனாளிகளுக்கு ரூ.5.50 கோடி மதிப்பில் பல்வேறு அரசின் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது. இரண்டாம் கட்டமாக தமிழ்நாட்டிலுள்ள சுமார் 12,500 கிராம ஊராட்சிகளில் 2,500 முகாம்கள் நடத்திட திட்டமிடப்பட்டுள்ளது. அந்த வகையில் நீலகிரி மாவட்டத்தில் 26 முகாம்கள் நடத்தப்படவுள்ளது. இதற்காக 15 அரசுத் துறை சார்ந்த 44 சேவைகள் தொடர்பாக கோரிக்கை மனுக்கள் பொதுமக்களிடமிருந்து பெறப்படுகிறது. முகாம்களில் பெறப்படும் அனைத்து கோரிக்கைகளும் இதற்கென ஏற்படுத்தப்பட்ட மக்களுடன் முதல்வர் இணைய தளத்தில் பதிவேற்றம் செய்யப்படும். அனைத்து முகாம்களில் இ-சேவை மையங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அதனடிப்படையில், "மக்களுடன் முதல்வர்" திட்ட முகாம் நீலகிரி மாவட்டத்தில், கீழ் கோத்தகிரி, தேவசாஸ்த்ரா திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.

தமிழ்நாட்டிலுள்ள அனைத்து ஊராட்சிகளிலும் இனிவருங்காலங்களில் மக்களுடன் முதல்வர் திட்டமானது, அமைச்சர் பெருமக்கள் மற்றும் அந்தந்த மாவட்ட ஆட்சித்தலைவர்கள் தலைமையில் நடைபெறும். இத்திட்டத்தின்கீழ் பெறப்படுகின்ற மனுக்களில் ஏற்றுக்கொள்ளப்பட்ட மனுக்களுக்கு ஏறக்குறைய 30 நாட்களுக்குள் தீர்வு காணப்படும் என்பது இத் திட்டத்தின்சிறப்பம்சமாகும்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான தமிழ்நாடு அரசு மூலம், கலைஞர் மகளிர் உரிமைத்தொகை திட்டம், புதுமைப் பெண் திட்டம், தமிழ் புதல்வன் திட்டம், கலைஞரின் கனவு திட்டம், நான் முதல்வன், இன்னுயிர் காப்போம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதன்படி, நீலகிரி மாவட்டத்தில், கலைஞர் மகளிர் உரிமைத்தொகை திட்டத்தின்கீழ், சுமார் 1.12 இலட்சம் மகளிர்களும், புதுமைப் பெண் திட்டத்தின்கீழ், 1,031 மாணவியர்களும், விடியல் பயணத்திட்டத்தின்கீழ், ஏறக்குறைய 50,000 மகளிர்களும், காலை உணவுத்திட்டத்தின்கீழ் 3,447 குழந்தைகளும், மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தின்கீழ் 1,67,317 பயனாளிகளும், கலைஞரின் வருமுன் காப்போம் திட்டத்தின்கீழ், 30,653 பயனாளிகளும், இன்னுயிர் காப்போம் நம்மை காக்கும் 48 திட்டத்தின்கீழ், 975 நபர்களும் பயன்பெற்றுள்ளனர்.

மேலும், கலைஞரின் கனவு இல்லத்திட்டத்தின் கீழ், ஏழை, எளிய மக்களின் பயன்பாட்டிற்கு இந்தாண்டு மட்டும் ஊராட்சிப் பகுதிகளில் ஏறக்குறைய 1,334 வீடுகள் வழங்கப்படுகிறது. இன்றைய தினம் சிறப்பாக நடைபெற்று வரும் மக்களுடன் முதல்வர் திட்ட முகாமில் மாற்றுத்திறனாளிகள் சிலர் தங்களுக்கு வீடு வேண்டுமென கோரிக்கை மனு அளித்தனர். 10 தினங்களுக்குள் அவர்களுக்கு வீடுகள் வழங்க வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் மூலமாக சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. எனவே, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்தி வரும் மக்கள் நலத் திட்டங்களை பொதுமக்கள் பயன்படுத்தி கொள்ள வேண்டும் என சுற்றுலாத் துறை அமைச்சர் தெரிவித்தார்.

முன்னதாக, சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் எரிசக்தி துறை/ தமிழ்நாடு மின்சார வாரியம், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை, காவல் துறை, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை, ஆதிதிராவிடர் / பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை உள்ளிட்ட துறைகளுக்கு பொதுமக்கள் வழங்கும் கோரிக்கை மனுக்கள் பதிவேற்றம் செய்யப்படுவதை பார்வையிட்டார்.

இந்நிகழ்ச்சியில், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) கௌசிக், மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.இரா.கீர்த்தி பிரியதர்சினி, குன்னூர் வருவாய் கோட்டாட்சியர் சதீஸ், கூட்டுறவு சங்கங்களின் இணைப் பதிவாளர் தயாளன், கோத்தகிரி ஊராட்சி ஒன்றியத்தலைவர் ராம்குமார், தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) திருமதி.கல்பனா, உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) சரவணன், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் ஜெயகுமார், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் (பொ) திருமதி. ஷோபனா, மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலர் சாகுல் அமீது, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ஸ்ரீதரன், திருமதி.விஜயா, ஊராட்சி மன்றத்தலைவர்கள் முருகன் (கெங்கரை), ஆல்வின் (தேனாடு), துணைத்தலைவர்கள் பாபு (கெங்கரை), திருமதி.அம்சவேணி உட்பட அரசுத் துறை அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.



விழுப்புரம் நகரம், முன்னாள் வார்டு செயலாளரும் கூட்டுறவு நியாய விலைக் கடை ஊழியருமான தாயுமானவர் தெரு ராமலிங்கம் தாயார் சிவகாமி அம்மாள் மறைவுக்கு விழுப்புரம் தெற்கு மாவட்டச் செயலாளர் டாக்டர்.பொன்.கௌதமசிகாமணி அஞ்சலி செலுத்தி அவரைப் பிரிந்து வாடும் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். நகரச் செயலாளர் இரா.சக்கரை, நகர பொருளாளர் என்.என்.இளங்கோ, வார்டு செயலாளர் ரீதர், நகர மன்ற உறுப்பினர் வசந்தா அன்பரசு, அருள் அன்பரசு, வார்டு நிர்வாகிகள் மைக்கல் ஜான், ராஜன் மற்றும் பலர் அஞ்சலி செலுத்தினர்.



தஞ்சாவூர் நாடாளுமன்றத் தொகுதியில் அதிக வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றியடையச் செய்த பேராவூரணி சட்டமன்றத் தொகுதி வாக்காளர்களுக்கும், கழக நிர்வாகிகளுக்கும், கூட்டணி கட்சியினருக்கும் தஞ்சை நாடாளுமன்ற உறுப்பினர் ச.முரசொலி வீதி, வீதியாகச் சென்று நன்றி தெரிவித்தார். உடன் பேராவூரணி சட்டமன்ற உறுப்பினர் என்.அசோக்குமார், ஒன்றியச் செயலாளர்கள் மு.க.முத்துமாணிக்கம், க.அன்பழகன், இளங்கோவன், ரவிச்சந்திரன், பேராவூரணி பேரூர் செயலாளர் என்.எஸ்.சேகர், பெருமகளூர் பேரூர் செயலாளர் மாரிமுத்து உள்ளிட்ட கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கூட்டணி கட்சி நிர்வாகிகள் உள்ளனர்.



மயிலாடுதுறை மாவட்டம் செம்பனார்கோவில் அண்ணா திருமண மண்டபத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஊரக பகுதிகளுக்கான "மக்களுடன் முதல்வர்" திட்டத்தை மயிலாடுதுறை மாவட்டத்தில் மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளர், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன் தொடங்கி வைத்தார். உடன் மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் ஏ.பி.மகாபாரதி, மயிலாடுதுறை நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.சுதா, சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் எம்.பன்னீர்செல்வம், மயிலாடுதுறை சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ராஜ்குமார் மற்றும் பலர் உள்ளனர்.